Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.529/2019

**Depositions of PW- 9**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பழனிச்சாமி | Occupation | மருத்துவர் |
| Father's name | முத்துச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of May 2026.

18.05.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் மூத்த குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.03.2017 அன்று இரவு 08.00 மணயளவில் அதே மருத்துவமனையில் அலுவல் மருத்துவராக பணியிலிருந்தபோது தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தாலுகாவை சேர்ந்த பொன்னன்குறிச்சியை சேர்ந்த சுடலைக்கண்ணு என்பவரின் மகன் துர்க்கைசாமி என்பவர் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய மருத்துவ நமுனாவுடன் சிகிச்சைக்காக வந்தார். அப்போது அவரை அன்று மாலை சுமார் 05.45 மணியளவில் திருவில்லிபுத்தூர் சர்ச் அருகில் வாகன தனிக்கை செய்துகொண்டிருந்தபோது அடையாளம் தெரிந்த 2 நபர்கள் கையால் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள்

1) இடது நடுவிரலில் 1*0.3 செ.மீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

2) வலது பெருவிரலில் வலி இருப்பதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது சுயநினைவுடன் காணப்பட்டார். பின்னர் அவருக்கு சிகிச்சை அளித்து அவரை வெளிநோயாளியாக செல்ல அனுமதித்தேன். பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்று வழங்கினேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினமே எதிரிகள்

மதுபோதையில் இருந்தது சம்மந்தமாக பரிசோதனை செய்வதற்கு இரவு 08.00 மணியளவில் மருத்துவமனைக்கு வந்த எதிரிகளை நான் பரிசோதித்து பார்த்தபோது அவர்கள் குடிபோதையில் இருந்தனர் என்று தெரியவந்ததால் நான் அவர்கள் குடிபோதையில் இருந்ததாக சான்று வழங்கினேன். **எதிரிகள் குடிபோதையில் இருந்ததற்கான சான்றிதழ்கள் அசாஆ.4 மற்றும் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

ஒரு நபரை கையால் தாக்கும்போது அவருக்கு சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. மேற்படி அவருக்கு ஏற்பட்டதாக கூறப்படும் இடது நடுவிரலில் ஏற்பட்ட காயமானது ஒரு நபர் தனக்குத்தானே ஏற்படுத்திக்கொள்ளவும் வாய்ப்புள்ளது என்றால் சரிதான். ஒரு நபர் வலி இல்லாமலேயே வலி இருப்பதுபோல் பாசாங்கு செய்வதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். ஒரு நபர் மது அருந்தியிருந்தால் அவருக்கு ரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை செய்தால் தான் மருத்துவ ரீதியாக அவர் மது அருந்தியிருந்ததாக கூற இயலும் என்றால் சரிதான். இவ்வழக்கில் மேற்படி எதிரிகளுக்கு சிறுநீர் மற்றும் ரத்தப் பரிசோதனை செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகள் தங்களுக்கு சிறுநீர் மற்றும் ரத்தப்பரிசோதனை செய்ய வேண்டாம் என்று எழுதி கையெழுத்து செய்து கொடுத்துள்ளனர். மேலும் அவர்கள் அன்று மாலை 04.00 மணியளவில் சுமார் 750 எம் எல் பீர் அருந்தியதாக என்னிடம் ஒப்புக்கொண்டுள்ளனர். எதிரிகள் மேற்படி நான் கூறியவாறு மது அருந்தியதாக என்னிடம் ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் காவலர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி சான்றிதழ்களானது என்னால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கு சிறுநீர் மற்றும் ரத்தப் பரிசோதனை செய்திருந்தால் அவர்கள் மது அருந்தவில்லை என்பது தெரியவந்திருக்கும் என்பதால் அவர்களுக்கு மேற்படி பரிசோதனை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.529/2019

**Depositions of PW- 10**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ராமசாமி | Occupation | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Father's name | சுந்தர்சிங் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of May 2026.

18.05.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.03.2017 அன்று மாலை 17.30 மணிக்கு திருவில்லிபுத்தூர் சர்ச் ஜங்சனில் போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் பணியில் இருந்து வந்தேன். அப்போது ராஜபாளையத்திலிருந்து மதுரை நோக்கி வந்த TN 30 BB 6432 என்ற பதிவெண் கொண்ட EUN Car ஐ எனக்கு மேற்கு பக்கத்தில் சார்பு ஆய்வாளர் துர்க்கைசாமியும் முநிகா 1131 துடியாண்டி என்பவரும் அந்த காரை நிறுத்தி வாகன சோதனையில் ஈடுபட்டபோது மேற்படி ஓட்டிவந்த கார் டிரைவரை சோதனை செய்தபோது அவர் குடிபோதையில் இருந்தது தெரியவந்தது. அவரை சார்பு ஆய்வாளர் துர்க்கைசாமியும் துடியாண்டி என்பவரும் கீழே இறங்க சொல்லி சோதனை செய்தபோது எனது காரை எதற்காக நிறுத்தினீர்கள் என்று கூறி சார்பு ஆய்வாளர் துர்க்கைசாமியை என்னடா சுன்னிமவனே எதற்காக என்னை நிறுத்தினாய் நான் யார் என்று தெரியுமா என்று அசிங்கமான வார்த்தையால் திட்டியவரை பின்னர் விசாரித்து விலாசம் தெரிந்து கொண்டோம். அவரது பெயர் சதீஷ்குமார் என்று தெரியவந்தது. அவருடன் அருகில் அமர்ந்து வந்தவர் பெயர் சரியாக நியாபகமில்லை. (பின்னர் சாட்சி நினைவுபடுத்தி ஆறுமுகம் என்று கூறினார்). சதீஷ்குமார் என்பவர் சார்பு ஆய்வாளர் துர்க்கைசாமியின்

சட்டை மற்றும் கையை பிடித்து இழுத்தார். பின்னர் அருகிலிருந்த ஆறுமுகம் என்பவரும் சார்பு ஆய்வாளரின் இடது கை விரலை பிடித்து இழுத்தார். அவருக்கு காயம் ஏற்பட்டது. பின்பு உங்கள் எல்லோரையும் கொலை செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். பின்பு நாங்கள் மூவரும் சதீஷ்குமார் மற்றும் ஆறுமுகம் இருவரையும் அருகிலிருந்த திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையம் நிலையத்திற்கு அழைத்து வந்து நிலையத்தில் பணியிலிருந்த சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தோம். இதுசம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

தினந்தோறும் எனக்கு கொடுக்கப்படும் பணிகளை காவல்நிலைய பொதுநாட்குறிப்பேட்டில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். அதனோடு Daily Duty Roaster ல் மேற்படி பணிகள் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். எனக்கு எங்கு எந்த பணி ஒதுக்கப்பட்டது என்பது குறித்து நானும் பாக்கெட் டைரி வைத்திருப்பேன் என்றால் சரிதான். மேற்படி பாக்கெட் டைரியை பார்த்தால் தான் மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் எனக்கு போக்குவரத்து சரிசெய்யும் பணி ஒதுக்கப்பட்டதா என்பது தெரியவரும் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தபோது அவரிடம் எனது பாக்கெட் டைரியை ஒப்படைத்தேனா என்றால் இல்லை. அதனை பார்வையிட்டால் மேற்படி தேதியில் எனக்கு சர்ச் ஜங்சனில்பணி ஒதுக்கப்படவில்லை என்பது தெரியவரும் என்பதால் அதனை அவரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் மேற்படி பாக்கெட் டைரியை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். சர்ச் ஜங்சன் என்பது போக்குவரத்து அதிகமான பகுதி என்றால் சரிதான். மேற்படி தேதியில் காவலர்களாகிய நாங்கள் எதிரிகளின் வாகனத்தை நிறுத்தி அவர்களை தகாத வார்த்தைகளால் பேசியுள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் எதிரிகள் எங்கள் மீது அருகிலிருந்த நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதற்காக சென்றார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு காவல்நிலையம் சென்றவர்களை வழிமறித்து நாங்கள் வாக்குவாதம் செய்தோம் என்றால் சரியல்ல. அதனால் எதிரிகள் என்மீதும் என்னுடன் இருந்த காவலர்கள் மீதும் புகார் கொடுத்துவிடுவார்கள் என்பதால் எதிரிகள் மீது கொடுக்கப்பட்டபொய்யான புகாரின் அடிப்படையில் நான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சதீஷ்குமார் என்பவர்சார்பு ஆய்வாளரின் சட்டை மற்றும் கையை பிடித்து இழுத்ததாக எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை சார்பு ஆய்வாளர்

என்னை விசாரித்தபோது நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகளின் வாகனத்தை நிறுத்தியபோது அவர்கள் மதுபோதையிலிருந்ததாகவும் ஆபாசமாக பேசி தாக்கியதாகவும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.